Ministry of Education
SINGAPORE

கல்வி அமைச்சு நிதி உதவித் திட்டம் (FAS) 2027

அரசாங்கப் பள்ளிகளிலும் அரசாங்க உதவி பெறும் பள்ளிகளிலும் பயிலும் வசதி குறைந்த சிங்கப்பூர் மாணவர்களது படிப்புக்குத் தேவைப்படும் நிதியுதவியைக் கல்வி அமைச்சு வழங்குகிறது.

வருமான

மொத்த மாதாந்திரக் குடும்ப வருமானம் =

$4,000

அல்லது அதற்கும் குறைவான

அல்லது

தனிநபர் சராசரி வருமானம் =

$1,000

அல்லது அதற்கும் குறைவான

கணிக்கப்பட்ட தனிநபர் சராசரி வருமானம் = மொத்த மாதாந்திரக் குடும்ப வருமானம் / குடும்ப உறுப்பினர்களில் எண்ணிக்கை

பயன்கள்

வகை	கல்வி நிலை		
	தொடக்கநிலை	உயர்நிலை	பல்கலைக்கழகப் புகுமுகநிலை
பள்ளிக் கட்டணங்கள்	பொருந்தாது	மாதத்திற்கு 100% முழு உதவித்தொகை	மாதத்திற்கு 100% முழு உதவித்தொகை
இதர கட்டணங்கள்	மாதத்திற்கு 100% முழு உதவித்தொகை	மாதத்திற்கு 100% முழு உதவித்தொகை	மாதத்திற்கு 100% முழு உதவித்தொகை
பாடப்புத்தகங்கள்	பாடப்புத்தகங்கள் இலவசம்		பொருந்தாது
பள்ளிச் சீருடை	பள்ளிச் சீருடை இலவசம்		பொருந்தாது
போக்குவரத்து உதவித்தொகை*	பள்ளிப் பேருந்தில் செல்லும் மாணவர்களுக்கு மாதந்தோறும் பள்ளிப் பேருந்துக் கட்டணத்தில் 70% உதவித்தொகை; அல்லது பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் மாணவர்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட மாதம் முதல் $21 என ஓராண்டுக்கு $252 வரை போக்குவரத்து உதவித்தொகை வழங்கப்படும்	பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் மாணவர்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட மாதம் முதல் $21 என ஓராண்டுக்கு $252 வரை போக்குவரத்து உதவித்தொகை வழங்கப்படும்	பொருந்தாது
பள்ளி உணவு உதவித்தொகை^	ஒப்புதல் வழங்கப்பட்ட மாதம் முதல் ஒவ்வொரு பள்ளி நாளுக்கும் வாரந்தோறும் 7 இலவச உணவுக்குரிய உதவித்தொகை வழங்கப்படும்;	ஒப்புதல் வழங்கப்பட்ட மாதம் முதல் ஒவ்வொரு பள்ளி நாளுக்கும் வாரந்தோறும் 10 இலவச உணவுக்குரிய உதவித்தொகை வழங்கப்படும்;	பொருந்தாது
கல்வி உதவித்தொகை	பொருந்தாது		ஓராண்டுக்கு $1,600

*FAS விண்ணப்ப ஒப்புதல் ஜனவரியிலிருந்து இல்லையென்றால், உங்கள் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்ட மாதத்திலிருந்து அதே ஆண்டு டிசம்பர் வரைக்குமான சார்பு-மதிப்பீட்டின்படி போக்குவரத்து மானியம் வழங்கப்படும்.
^பள்ளியில் வாங்கப்பட்டு உட்கொள்ளப்படும் பள்ளி உணவுகளுக்கான மானியங்கள்.

எவ்வாறு விண்ணப்பிப்பது?

QR குறியீட்டை ஸ்கேன் செய்து, MOE-இன் Student Finance System-இல் உள்நுழைந்து உங்கள் விண்ணப்பத்தை இணையத்தில் சமர்ப்பிக்கலாம். மாணவர் நிதி உதவி பற்றிய சமீபத்திய தகவல்களையும் தற்போதைய பரிவர்த்தனை பதிவுகளையும் Student Finance System -இல் பார்க்கலாம்.

உங்கள் விண்ணப்பத்தின் முடிவை பள்ளி உங்களுக்குத் தெரிவிக்கும். விண்ணப்பத்தின் நிலையைப் பார்க்க, நீங்கள் எப்போது வேண்டுமானாலும் Student Finance System -இல் உள்நுழையலாம்.

studentfinance.moe.gov.sg

கூடுதல் உதவி தேவையா?

உங்களுக்குக் கூடுதல் உதவி தேவைப்பட்டடால், நீங்கள் உங்கள் பிள்ளையின் பள்ளியை அணுகிக் கூடுதல் உதவியை நாடலாம்.

உங்களுக்கு மின்னிலக்கக் கருவி பெறுவதற்கும் அதோடு/அல்லது அகண்ட அலைவரிசை இணையத் தொடர்பைப் பெறுவதற்கும் உதவி தேவைப்பட்டால் நீங்கள் தகவல்தொடர்பு, ஊடக மேம்பபாட்டு ஆணையத்தின் (IMDA) மின்னிலக்க அணுகல் திட்டங்களுக்கு# விண்ணப்பிக்கலாம். கூடுதல் தகவல்களுக்கு www.digitalaccess.gov.sg இணையப்பக்கத்தைப் பார்வையிடவும்.

இது குறித்துத் தகவல் பெற, **6377 3800** என்னும் தொலைபேசி எண்ணின்மூலம் அல்லது **info@imda.gov.sg** என்னும் மின்னஞ்சல்மூலம் தொடர்பு கொள்ளலாம்.

தகுதிக்கும் இருப்புக்கும் உட்பட்டது.

ஏனைய தகவல்கள்

வெவ்வேறு பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர்கள்

நீங்கள் பள்ளிக்குச் செல்லும் உங்களது எல்லாப் பிள்ளைகளுக்கும் அவர்கள் பயிலும் ஏதேனும் ஒரு பள்ளியில் ஒரு விண்ணப்பப் படிவத்தைச் சமர்பித்தால் போதுமானது. விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளும் பள்ளி, உங்கள் பிள்ளைகள், அனைவரது விண்ணப்ப முடிவுகளையும் உங்களுக்குத் தெரியப்படுத்தும்.

2027-இல் உயர்நிலை1-ஆம் வகுப்புக்குச் செல்லும் தொடக்கநிலை 6-ஆம் வகுப்பு மாணவர்கள்

தொடக்கநிலை 6-ஆம் வகுப்பு மாணவர்கள், தத்தம் தொடக்கப்பள்ளிகளில் அடுத்த ஆண்டுக்குரிய உயர்நிலை ஒன்றாம் வகுப்புக்கான கல்வி அமைச்சின் நிதி உதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

கூடுதல் தகவல்கள் பெற, ***www.moe.gov.sg/financial-matters/financial-assistance/*** என்னும் இணையப்பக்கத்தைப் பார்வையிடவும்.